1994 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்,"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. விதி 110-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் உள்ள தொடக்கப் பள்ளிகளை மூடப் போவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை வைக்க அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய அறிக்கையை இப்போது பேரவைக்கு அவர் அளிக்கலாம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் 50-க்கும் குறைவான மாணாக்கர் எண்ணிக்கையுள்ள தொடக்கப் பள்ளிகளை மூடிவிடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதைப் போல் சித்தரிக்கும் செய்திகள் நாள் ஏடுகளில் வெளி வந்துள்ளன. அச்செய்திகள் ஆதாரமற்றவை. எனினும் பொது மக்கள் மத்தியில் தேவையற்ற அச்ச உணர்வைத் தோற்றுவித்துள்ளன என்கிற தகவல் அரசுக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில் மேற்கண்ட செய்திகள் உண்மைக்கு மாறானவை என்பதையும், ஆதாரமற்றவை என்பதையும் அரசின் சார்பில் தெளிவுபடுத்த வேண்டியது அவசிய மாகிறது.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1994 மார்ச் 31

கடந்த சில ஆண்டுகளாக தொடக்கக் கல்வித் துறையில் ஊர்கள்தோறும் அரசினால் தொடங்கப்பட்டுள்ள பள்ளிகள் எண்ணிக்கையே கல்வியைப் பரப்பும் பணியில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்குச் சான்றாக அமைகிறது.

1992—93-ல் 126 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும், 1993—94-ல் 305 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் அரசால் தொடங்கப்பட்டுள்ளன. 500 மக்கள் தொகை கொண்ட பள்ளிகள் இல்லாத சிற்றூர்களில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் தொடக்கப் பள்ளிகளை நிறுவ வேண்டும் என்பதே அரசின் கொள்கை. இக்கொள்கையின் அடிப்படையில் கிராமங்களிலும், சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளிகள் தேவை கண்டறியப்பட்டு பள்ளிகள் அமைப்பதற்கான ஆணைகள் கல்வித் துறையினால் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பள்ளிகளின் தேவை பற்றிய மதிப்பீடும் அம்மதிப்பீடுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளும் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லோருக்கும் கல்வி என்கிற இலட்சியத்தை அடையும் முயற்சியில் அரசு தீவிரமாக இருந்து வருகிறது.

தொடக்க-நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அங்கீகாரம் பெறாத ஒரு ஆசிரியர் சங்கத்தினர் எங்கோ ஒரு விழாவில் எந்தவித ஆதாரமும் இன்றி வெளியிட்ட இந்தக் கருத்தை உண்மையென நம்பிப் பல்வேறு அரசியல் கட்சிகளின் பொறுப்பாளர்களும் இது குறித்துத் தங்களது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். நாளிதழ்களும் உண்மைக்குப் புறம்பான இந்தச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளன. பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தேவையில்லாத பதட்ட நிலையையும் ஐயப்பாட்டையும் உருவாக்கக்கூடிய சூழ்நிலை எழுந்துள்ளது. கிராமப்புற மக்களது முன்னேற்றத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 500 மக்கள்தொகை கொண்ட அனைத்து ஊர்களிலும் தொடக்கப் பள்ளி நிறுவி, அனைவருக்கும் கல்வி தருவதில் அரசு முனைப்புடன் செயலாற்றுகிறது. கிராமப்புற மாணவர்களுக்கு இடையூறு நேரக்கூடாது என்பதால் தான் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள 8 ஆம் வகுப்புகளையும், அதைத் தொடர்ந்து 7 மற்றும் 6 ஆம் வகுப்புகளையும் அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றுவது என்ற திட்டத்தையே கைவிட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு மேற்கொண்டதை அனைவரும் பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ ஆதாயம் கருதி ஐந்தாயிரம் பள்ளிகளை மூடி அறிவுக் கண்ணைக் குத்துவதா என்றுகூட ஒருசிலர் தங்கள் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள் இந்தச் செய்தியில் எள்ளளவும் உண்மையில்லை.

1994 மார்ச் 31] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

(முற்பகல் 10-25)

தமிழகத்தில் தற்போது 50 மாணவர்களுக்குக் குறைவாகப் பயிலும் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 3,671. இப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கையை உயர்த்தவே அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது இந்நிலையில் இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி, பொருளற்றதும், பொருத்தமற்றதுமான அறிவிப்புகளையும், கருத்துகளையும் வெளியிட்டு, ஒருசிலர் மக்கள் மத்தியில் குழப்பமேற்படுத்தும் செயலில் இறங்கியிருப்பது வருந்தத்தக்கது. கிராமப்புற மக்களுக்கு வழங்கப் பட்டுள்ள எந்தச் சலுகையையும் திரும்பப் பெறவோ அல்லது குறைக்கவோ கூடாது என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் உறுதியாக இருக்கிறார்கள்.

இத்தகைய பள்ளிகளை மூடலாம் என்ற முடிவு அரசின் எந்த மட்டத்திலும் இதுவரை ஆராயப்படவே இல்லை. எனவே இது குறித்து அரசாணையோ அல்லது துறையின் செயல்முறைகளோ வெளியிட வேண்டிய அவசியமும் ஏற்பட வில்லை.

தமிழக அரசின் நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்கும் வகையிலும் மக்கள் மத்தியில் தேவையில்லாத குழப்பம் ஏற்படுத்தும் வகையிலும் பரப்பப்பட்டிருக்கும் ஆதாரமற்ற இந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது.

கிராமப்புற மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பள்ளிகளை மூட எந்தவிதத்திலும் ஆணையிடவில்லை என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. வரவு-செலவுத் திட்டம் 1994 95 பொதுவிவாதம் —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994—95 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், பதிலுரையும். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன், : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994—95 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் இந்தியக் குடியரசுக் கட்சியின்